RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd223S133

# Bio-Cultural Changes in the Contemporary Environment

## சமகாலச் சூழலில் வாழ்வியல் பண்பாடு மாற்றங்கள்

**R. Lakshmi** [a, *]

[a] Department of Saiva Siddhanta, Madras University, Chennai-600005, Tamil Nadu, India.

*Corresponding author Email: ramanlakshmi47@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S133

Received: 13-04-2022; Revised: 20-07-2022; Accepted: 26-07-2022; Published: 20-08-2022

**Abstract:** Culture is based on tradition. Changes in life refer to changes that occur over time. One represents antiquity and the other is modern. What is culturally appropriate is that the glory of the old is not changed by the new. According to the evidence of "Saandror Senra Neri" (Principle of wise men) in Puranaanuru, culture is an expression of the individuality of a race. Humanity is a practise of the adage "where all places are ours; all are our relatives." The human race, which started life in harmony with nature, has today destroyed nature for its own selfish interests. An immoral way of life is the reason for the destruction of the human race in the future. So let's respect the warning that nature gives us today and protect virtue.

**Keywords:** Culture, Humanity, Nature, Virtue

**Language:** **Tamil**

## முன்னுரை

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்றார் தமிழ் மூதாட்டி ஔவையார் (Venkatasamy Nattar, 2018).

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்"

என்றார் தமிழ்மறை தந்த திருவள்ளுவ பெருமானார் (Parimelazhagar, 2007). இவ்வுலகில் அரிதான மானிடப் பிறவியைப் பெற்ற நாம் குறிக்கோளுடைய, பண்புடைய வாழ்வியல் நெறியில், போற்றும் வண்ணம் அதனை நிலை நிறுத்தல் வேண்டும்.

நிலவுலகில் மனித இனம் தோன்றிய காலத்தில் உணவு, உறையுள், பாதுகாப்புத் தேடி "அலைகுடி" மக்களாக வாழ்க்கையைத் துவங்கியுள்ளனர். "நீரின்றி அமையாது உலகு" என்ற முதுமொழிக்கு ஏற்ப ஆறுகளைக் கண்டவுடன் அங்கு "நிலைகுடி" மக்களாகத் தமது வாழ்க்கையை நிலைநிறுத்தினர் என்பது சமூக இயலாளர்கள் கருத்து ஆகும். வரலாற்று ஆய்வாளர்களும் இதனையே சான்றுகளுடன் வெளிப்படுத்துகின்றனர் (Parimelazhagar, 2007).

## இன அறமே பண்பாடு

மனித இனம் புறத் தேடலைத் தேடி அலைந்த பொழுதே அகத்தேடலையும் கைக்கொண்டது. அகத் தேடலின் சிந்தனையின் வெற்றியில் தனித்துவமான கட்டுப்பாட்டையும், அறவொழுக்கத்தையும் தமக்குத் தாமே முறைப்படுத்திக் கொண்டன. வீரமும், விவேகமும் நிறைந்த தலைமையை ஏற்றுக் கொண்டது. நாளடைவில் அந்த இனத்தின் செயலொழுக்கமே அடைய வேண்டிய குறிக்கோளை நீதியுடையதாகவும், நேர்மையுடையதாகவும், ஏற்புடையதாகவும் ஆக்கிப் பண்பாடு என்னும் விழுமியத்தை அடைந்தன.

## பண்பாடு சொற்பிறப்பு

“பண்படுதல் என்பது சீர்படுத்தல் என்ற பொருள்படும். மக்கள் வேளாண்மைக்கு நிலத்தைப் பண்படுத்துதல் போன்று மனித இனங்கள் தங்களது மேம்பாட்டிற்கென" மனதைச் செம்மைப்படுத்தலே பண்பாடு எனப்பட்டது”.

## தமிழினப் பண்பாடு

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி” 5 எனப் புகழ் பெற்ற தமிழரின் இனப் பண்பாடு " சங்க இலக்கியங்கள்” ஆகிய சான்றுகளின் மூலம் பெருமையும், இறுமாப்பும் கொண்ட தனித்துவமான பண்பாட்டு நெறியை உலகிற்கு வழங்கியுள்ளது.

## சான்றோர் சென்ற நெறி

"சமுதாய அமைப்பில் விதிகள் மிக்க மதிப்புடனும், அடக்கத்துடனும் பின்பற்றப் பெற்று வந்தன என்ற செய்தியை புறநானூறு,"

“இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்

அறவிலை வணிகன் ஆய் அவன் பிறரும்

சான்றோர் சென்ற நெறி என

ஆங்குப் பட்டன்று அவன் கை வண்ணமே”

என தெரிவிக்கிறது (Puliyur kesigan, 1971).

"அறத்தோடு சார்ந்த வாழ்வியல் நெறியே" அறஇயல்

தமிழ் இனப்பண்பாட்டின் அடிப்படை நெறியாக அமைந்தது.

"மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" (Parimelazhagar, 2007)

"அறத்தான் வருவதே இன்பம்”

எனவும்

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை”

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்”

எனவும் வள்ளுவரும் அறத்தையும், ஒழுக்கத்தையும் வலியுறுத்தியுள்ளார் (Parimelazhagar, 2007).

## பண்பாட்டுக் கூறுகள்

மரபாய் அமையும் அறம் சார்ந்த வாழ்வியல் நெறி, வரலாறு, மொழி, இலக்கியம், ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம் போன்ற கலைகள், பொருளாதாரம் வாணிபம் செல்வச் செழிப்பு, சமயம் கடவுள், தொன்மம் போன்ற பல கூறுகளை உள்ளடக்கியது.

## இயற்கையோடு இயைந்த வாழ்வு

தமிழர் பண்பாட்டில் சங்க காலம் நிலத்தின் இயற்கை அமைப்பிலேயே குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல், பாலை எனவே வகைப்படுத்தப்பட்டு அதற்கான கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றையும் வகுத்துள்ளனர். இருப்பினும், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்ற உயரிய குறிக்கோளையும் கொண்டிருந்தனர். இன்றைய மனித நேயத்தின் முதல் அழைப்பு சங்கத்திற்கு உரியது.

## இன்றைய சூழல் - முரண்

இன்றைய சூழலில் நாம் இயற்கைக்கு மாறான வாழ்க்கை வாழ்கிறோம். காடுகளை அழித்தோம், சுத்தமான காற்றிற்கும், மழைக்கும் ஏங்குகிறோம். நிலவுலகில் காணப்படும் அனைத்திலும் "மனித இனம்" மட்டுமே சுயநலப்போக்கால் தனது முன்னேற்றத்திற்காக இயற்கை வளங்களை சுரண்டுகிறோம். நிலம், நீர், காற்று, வான்வெளி, பரந்த கடல்பரப்பு எதையும் விட்டு வைக்காமல் மனித இனத்தின் அசுர கரங்கள் ஆக்கிரமிக்கின்றன. போட்டி, பொறாமை, பொச்சரிப்பு போன்ற குணங்களுடன் எதை, எதையோ தேடி ஆலாய்ப் பறந்து, ஓடாய்த்தேயும் வாழ்வியல் முறைக்குத் தள்ளப்படுகிறோம். பசி, தாகம், தூக்கம் மறந்தோம். நோய்க்கு ஆளானோம். எதிர்கால நம் சந்ததிகளுக்கு எதைக் கொடுத்து விட்டுச் செல்லப் போகிறோம்.

"மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான், ஆனால் எங்கும் கட்டுண்டு கிடக்கிறான்" என்றார் கல்வியியலாளர் ரூஸோ- மனிதனின் சுதந்திரம் என்பது எது வரை? இன்று உலகத்தையே நிலை குலைய வைக்கும் Covid19 மனித குலத்திற்கு விடும் வினா எது? இன்று உலகமே நோயின் சங்கிலி பிடியில் கட்டுண்டு பொருளாதார வளத்தை இழந்து, உறவுகளை இழந்து, பூட்டப்பட்ட வீட்டினுள் பயந்து உறைந்து சிறைப்பட்டுள்ளது. ஆனால் இயற்கை என்றும் போல் இயங்குகிறது. சூரிய, சந்திர இயக்கமோ, மலர்கள் மலர்வதோ, காலத்திற்குரிய கனிகள் மக்களுக்கு கிடைப்பதோ தடைபடவில்லை.

மனித இனத்திற்கு விடப்படும் எச்சரிக்கை என்ன? மனித இனம் நம்மை அழித்துவிடும் என்றறியாத காடுகளும், காட்டில் வாழும் உயிரினங்களும், சிட்டுக்குருவி, கிளி போன்ற பறவை இனங்களின் வாழ்வைத் தடைப்படுத்திய அலைபேசி கோபுரங்களும், நிலம், ஆறு, கடல் என அனைத்தையும் பாழ்படுத்திய பிளாஸ்டிக் கழிவுகளும் என மனித இனம் இயற்கையை சிதைத்ததின் விளைவுகளை இன்று நாம் அறுவடை செய்கிறோம்.

"பூவுலகில் தோன்றிய எந்த உயிரினமும் அது வாழும் வீட்டை அழிப்பதில்லை, அழிக்க முனைவதுமில்லை. பரிணாம வளர்ச்சியில் கடைசியாகத் தோன்றிய மனிதர்களான நாம் பூமிக்கே உலை வைக்கும் ஒற்றை உயிரினம்".

## மனித இனமே விழித்துக் கொள்

இந்த உலகம் மனித இனம் மட்டும் வாழ்வதற்காகப் படைக்கப்பட்டதல்ல. இவ்வுலகில் உள்ள எதுவும் அழிப்பதற்காக படைக்கப்படவில்லை. உலகில் உள்ள அனைத்தும் பொருட்களையும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குத் தரவேண்டிய பொறுப்பு மனித இனத்தையே சார்ந்தது. உலகில் உள்ள இயற்கை வளங்களின் "அறங்காவலர்களாக" மனித இனம் செயல்பட வேண்டும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஒம்புதல் என வள்ளுவரும் மேதினியில் இட்டார் பெரியர் இடாதாரர் இழி குலத்தார் (Parimelazhagar, 2007) என ஔவையாரும் "யாவர்க்குமாம் ஒரு பிடி" (Venkatasamy Nattar, 2018) என்ற திருமூலரும் "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" (Manikkavasagan, 2016) என்று வள்ளலாரும், தனியொருவனுக்கு உணவில்லை எனில் செகத்தினை அழித்திடுவோம் (Ramalinga Swamigal, 2019) என்ற பாரதியாரும் வாழ்ந்த தமிழ்நாடு. எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்- என்ற சான்றோர்களின் நெறியில் நிற்க பழக வேண்டும்.

## அறஇயல்

மனிதரில் விலங்குமுண்டு, மனிதரில் மனிதருண்டு, மனிதரில் தெய்வமுண்டு என்ற கருத்தும் தனி மனிதனின் பண்பு. அவனது நடத்தையின் மூலம் வெளிப்படுகிறது என்பதும் அறஇயலாளர்கள் வெளிப்படுத்தும் கருத்தாக உள்ளது. உலகில் பிறந்த மனிதர்கள் யாவரும் தமது நேர்மையான உழைப்பினால் சிறந்த கல்வி, வேலைவாய்ப்பு, பொருள் சேர்த்தல் போன்ற தகுதிகளைப் பெறும் சம உரிமைப் பெறுகின்றனர். இது தந்நலம் எனவும், சமுதாயத்தில் தனக்குரிய தகுதியைப் பெறும் உரிமை அனைவர்க்கும் உண்டு என்பதும் பொதுவானது. தனது முன்னேற்றத்திற்காக நீதியற்ற வழியில் பிறரை வஞ்சித்து, ஏமாற்றிப் பறித்துக் கொள்ளுதலே சுயநலம் எனப்படும்.

தனது நலன், முன்னேற்றம் பற்றி கவலைப்படாமல் சமுதாய நலனுக்காகப் பாடுபடும், தனது கைப்பொருள், காலம் இவற்றைச் செலவிடும் மனப்பான்மை கொள்வது பொது நலம் எனவும் வகைப்படுத்தப்படுகிறது. இவர்கள் தியாகிகள் எனப் போற்றப்படுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் சமுதாயத்தில் கைக்கொள்ளப்படவேண்டிய பண்புகளாக அன்பும், பரிவும், சமநோக்குமே முதலிடம் பெறுகிறது.

## மனிதனுடைய உயர்நிலைக் குறிக்கோள்

வாழ்வுக்குப் பொருந்துவனவாக அமைந்த எளிமை, தூய்மை, பொறுமை, நேர்மை, வாய்மை, இன்சொல் போன்ற நடத்தைகளைக் கைக் கொள்வதே ஆகும். மனிதனுடைய மனச்சான்று அறிவியல் இயல்பானது, மன் உணர்ச்சிகளைச் செயல்படுத்தும், கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கது. சரி, தவறு என்ற தீர்ப்பையும் வழங்குவது மனிதனுடைய பகுத்தறிவு செய்யத்தகுந்தது, செய்யத் தகாதது என்பதை உணர்த்துவது. மனச்சான்றின் படி மனிதன் நடக்க வேண்டும். இந்த வாழ்வியல் அறக்கொள்கைகள் எக்காலத்தும், எல்லோராலும் பின்பற்றப்பட வேண்டும். வெளியிலிருந்து தாக்கும் விசையினாலோ, மனப்போராட்டத்தினாலோ வாழ்வியல் அறங்களை கைவிடக் கூடாது.

சமுதாயம் என்பது ஆண், பெண் மற்றும் மூன்றாம் பாலினம் என்ற முக்கோண அமைப்பைக் கொண்டது. பாலினப் பாகுபாடு என்பது சமுதாய பண்பாட்டைச் சிதைக்கும் கரையான். ஆணுக்கு நிகராகப் பெண்களின் முன்னேற்றமும் இருக்க வேண்டும். பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதில் பெண்களே முதலிடம் வகிக்கின்றனர். குழந்தைகள் தாயிடமிருந்தே பல நற்பண்புகளைப் பெறுவதாக ஆராய்ச்சியாளர்கள் விளக்குகின்றனர்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம்

செய்திடல் வேண்டும் அம்மா - இந்த

பங்கைய கைந்நலம் பார்த்தல்லவோ

பாரில் அறங்கள் வளரும் அம்மா"

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். விவேகானந்தர் போன்ற துறவிகள் முதல் காந்தியடிகள் போன்ற தலைவர்கள் வரை அனைவரும் தாயின் பெருமையையும், பெண்களுக்குக் கொடுக்கப்படும் கல்வியானது அடுத்து தலைமுறைக்கு கொடுக்கப்படும் நம்பிக்கை என்றும் குறிப்பிடுகின்றனர்.

சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளாகியும் பெண்கள் பத்திரிக்கை ஒன்றின் அட்டைப்பக்கத்தில் "பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம்" என்ற செய்தி இடம் பெறுகிறது. எனில் பாதுகாப்பற்ற நிலையில் பெண்கள், பெண் குழந்தைகள் இருப்பதும் உறுதியாகிறது முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த தினம் (பிப்ரவரி 24) பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கும், பெண்குழந்தைகளுக்கும் சக வாய்ப்பும் -பாதுகாப்பும் கொடுத்து நம் சமுதாய பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும்

## முடிவுரை

பண்பாடு என்பது மரபு வழி சார்ந்தது. வாழ்வியல் மாற்றங்கள் என்பது காலத்திற்கேற்ப ஏற்படும் மாற்றங்களை குறிப்பது. ஒன்று பழமைமையும் அடுத்த நவீனத்தையும் குறிப்பது. பழமையின் பெருமை மாறாத புதுமை என்பதே பண்பாட்டில் ஏற்புடையது. நம் தமிழர் பண்பாடு பல காலமாகப் பேணப்பட்ட திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களை குறித்து நின்றாலும் அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடே ஆகும். நல்லதும் நன்மையுமே நிலைத்து நிற்கும் ஆற்றலுடையது. நமது பண்பாடும் காலத்தை வென்று நிற்கும் ஆன்மபலம் உடையது.

## References

Manikkavasagan, G., (2016) Thirumoolar Aruliya Thirumanthiram, Uma Pathippagam, Chennai, India.

Parimelazhagar, (2007), Thirukkural, Sharadha Publishing, Chennai, India.

Puliyur Kesigan, (1971) Purananuru, Pari Nilaiyam, Chennai, India.

Ramalinga Swamigal, (2019) Thiruvarutpa, Prema Pathippagam, Chennai, India.

Venkatasamy Nattar, N.M., (2018) Avvaiyarin Moodhurai, Manivaasagar Pathippagam, Chennai, India.

**Funding**

No funding was received for conducting this study.

**Conflict of interest**

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

R. Lakshmi, Bio-Cultural Changes in the Contemporary Environment, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 171-175. DOI: https://doi.org/10.54392/ijmrd223S133